தகவல் சட்டம் 2005
அறிவும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 09.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.15710/F/2024**

திரு இரா. மோகனவேல் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
நிதி ஆலோசகர் மற்றும் நிறுவனச் செயலர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், -- பொது அதிகார அமைப்பு
எண்.1/1, மேயர் ராமநாதன் சாலை,
எழும்பூர், சென்னை - 600 008.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 11.07.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 27.08.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 01.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு இரா. மோகனவேல் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு P. சங்கரகுமார், நிதி ஆலோசகர் மற்றும் நிறுவனச் செயலர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், எழும்பூர், சென்னை என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, எழும்பூர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதா மேம்பாட்டுக்கழக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் அரசாணை நிலை எண்.52, நாள் 18.11.2002-ல் TABCEDCO கடனை செயல்படுத்துவதற்கான Terms and Conditions தொடர்பான Annexure இணைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இணைக்கப்பட்ட Annexure-ன் நகல், மேற்படியான Annexure-ஐ திருத்தம் செய்தோ அல்லது மாற்றம் செய்தோ அல்லது புதிதாக வேறு ஏதேனும் அரசாணையோ அல்லது சுற்றறிக்கையோ இருப்பின் அவற்றின் நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 6 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்களை அவருக்கு முழுமையாக வழங்குவதற்கு சிறிது கால அவகாசம் வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். மேலும், இன்றைய விசாரணையில் மனுதாரர் கலந்து கொள்ளாத காரணத்தினால், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.15710/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
நிதி ஆலோசகர் மற்றும் நிறுவனச் செயலர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்
பொருளாதார மேம்பாட்டுக்கழகம்,
எண்.1/1, மேயர் ராமநாதன் சாலை,
எழும்பூர், சென்னை - 600 008.

**<u>வழக்கு எண்.SA.15710/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு இரா. மோகனவேல், த/பெ. ராமசாமி,
அம்மன் கோவில் வளவு,
கடத்தூர், கடத்தூர் அக்ரஹாரம்,
சேலம் மாவட்டம் - 636 308.

Copy to: File
SNPS / 11.04.2025